நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: CC 125/2023

வழக்கு சாட்சி : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தினகர் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | தான்தோன்றி | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | 48 / 2025 |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **16.07.2025**

(1வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் தாக்கல் செய்த அ.சா.ஆ.22 – நான்கு வருட குத்தகை ஆவணம் என் வசம் இருந்தது என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் போது அதனை நான் போலீசாரிடம் கொடுத்துவிட்டேன். அ.சா.ஆ.22 ஆவணம் நீதிமன்றத்தில் தான் இருந்தது. அதை தான் நான் தாக்கல் செய்தேன். அ.சா.ஆ.22 ஆவணம் 11.06.2025 வரை போலீசார் வசமோ, நீதிமன்ற வசமோ மேற்படி ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. 11.06.2025 பிறகு அ.சா.ஆ.22 ஆவணத்தில் எதிரியின் கையொப்பத்தை மோசடியாக இட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரி. அதனால் தான் அதில் உள்ள கையொப்பம் எதிரியுடைய கையொப்பமா இல்லையா என்பது பரிசோதனை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

நான் கட்டுமான தொழில் செய்கிறேன். மேற்படி தொழில் சம்பந்தமாக யார் பத்திர பதிவு செய்வார் என்றால் என்னுடைய நிலம் என்றால் நான் பத்திர எழுத்தர் மூலம் பதிவு செய்வேன். ஆவணங்களில் சாட்சி கையொப்பம் வாங்கும் பழக்கம் உள்ளதா என்றால் பதிவு செய்யப்படும் ஆவணம் என்றால் சாட்சி கையொப்பம் பெறுவேன். பதிவு செய்யப்படாத ஆவணங்களில் றுவேனா என்றால் அது ஆவணங்களின் தன்மையை சார்ந்தது. அ.சா.ஆ.22 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் பெறப்பட்டுள்ளதா என்றால்

இல்லை. நான்கு வருட குத்தகை ஆவணம் என்ற போதும் அ.சா.ஆ.22 ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரி. அ.சா.ஆ.22 ஆவணத்தில் உள்ள சரத்துகள் அனைத்தும் என்னாலும், போலீசாராலும் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதில் உள்ள கையொப்பங்கள் எதிரியுடையது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி அ.சா.ஆ.22 ஆவணத்தில் உள்ளதாக கூறப்படும் எதிரியுடைய கையொப்பங்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப சம்மதா என்றால் சம்மதம். ஏற்கனவே இந்த ஆவணத்தில் உள்ள என்னுடைய கையொப்பங்கள் குறித்து தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பபட்டு ஆய்வறிக்கை பெறப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் உள்ளதாக கூறப்படும் எதிரியுடைய கையொப்பங்கள் தடய அறிவியல் ஆய்வகத்தால் ஆய்விற்கு உட்படுத்தபடவில்லை என்றால் சரி. மேற்படி ஆவணத்தில் உள்ளதாக கூறப்படும் எதிரியுடைய கையொப்பங்கள் தடய அறிவியல் ஆய்வகத்தால் ஆய்விற்கு உட்படுத்தபடவில்லை என்ற சங்கதி எனக்கு முன்பே தெரியும் என்றால் சரி. இந்நிலையில் மேற்படி ஆவணத்தில் உள்ளதாக கூறப்படும் எதிரியுடைய கையொப்பங்கள் தடய அறிவியல் ஆய்வகத்தால் ஆய்விற்கு உட்படுத்தபட போலீசாரிடம் நான் ஏதேனும் சொன்னேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தில் உள்ள கையொப்பங்கள் எதிரியுடையது அல்ல என்பதால் தான் மேற்படி கையொப்பங்களை தடய அறிவியல் ஆய்வகத்தால் ஆய்விற்கு உட்படுத்தபட போலீசாரிடம் நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.